
# மின் பட்டியலிடல் தொடர்பாக நீங்கள் அறிய வேண்டியவை




மின் நுகர்வோர்க்கான சி.ஏ.ஜி யின் பிற வெளியீடுகள்

* உங்கள் இணைப்பில் மாற்றங்களை ஏற்படுத்தல்
* மின் அளவி தொடர்பாக நீங்கள் அறிய வேண்டியவை
* புதிய மின் இணைப்பு பெறுவதற்கான வழிமுறைகள்
* தரமான சேவையும் மற்றும் குறைதீர் முறைகளும்


CAG
Citizen consumer and civic Action Group

New #246 (Old #277B), TTK Road (J.J. Road ),
Alwarpet, Chennai 600 018 INDIA
Ph:044-24994458 / 24660387

**மின் பட்டியல் தொடர்பாக நுகர்வோரிடம் அடிக்கடி எழும் கேள்விகளுக்கான விளக்கங்கள் மற்றும் நுகர்வோர் உரிமைகள் போன்றவற்றை விவரிக்கும் நோக்குடன் இக்கையேடு வெளியிடப்பட்டுள்ளது. இதன் மூலம் நுகர்வோர் பெரிதும் பயனடைவார்கள் என நம்புகிறோம்.**

### 1. மின் சேவை தொடர்பான கட்டணங்கள் எவை?

2. நுகர்வோர் தங்களுக்கு வழங்கப்படும் சேவைகளுக்கு செலுத்த வேண்டிய கட்டணங்கள் பின்வருமாறு வகைப் படுத்தப்படும்:

நிலையான கட்டணங்கள் மற்றும் குறைந்த பட்ச மாதாந்திர கட்டணத்திற்கு உட்பட்டு, மின் பயனீட்டுக் கட்டணங்கள்.

### 2. நிலையான கட்டணங்கள் என்றால் என்ன?

மின் நிலையங்கள் மற்றும் பகிர்மான கம்பிகள் போன்ற கட்டுமான செலவுகள், பராமரிப்புப் பணிகள், ஊதியங்கள், மீட்டர் கணக்கிடுதல், பயனீட்டுத் தொகை கணக்கிடுதல் போன்ற செலவினங்களுக்காக தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் செய்யும் செலவுகளைப் பொறுத்து நிலையான கட்டணங்கள் வசூலிக்கப்படும்.

இக்கட்டணங்கள் உங்கள் மின் பளுவுக்கு ஏற்ப மற்றும் வீதப்பட்டியின்படி (Tariff) அமையும்.

**குறிப்பு: குடிசை மற்றும் விவசாய மின் இணைப்பு பெற்றவர்கள் இக்கட்டணத்தை செலுத்த தேவையில்லை.**

### 3. மின் நுகர்வு கட்டணங்கள் என்றால் என்ன?

மின் நுகர்வு கட்டணங்கள், பட்டியலின் (Bill) பெருவாரியான பகுதியாகும். இதுவும் வீதப்பட்டி/வரம்பு பிரிவின் படி மாறும்.

வீடு, விவசாயம், குடிசை, வியாபாரம், தொழிற்சாலை பிரிவுகளுக்கான தனி தனியான வீதப்பட்டியல்படி மின் இணைப்பு வழங்கப்படுகின்றது.

### 4. குறைந்தபட்ச மாதாந்திர கட்டணங்கள் என்றால் என்ன?

குறைந்தபட்ச கட்டணத்திற்கும் குறைவாகவே மின்சாரம் பயன்படுத்தப்படும்போது நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச மின் கட்டணம் வசூல் செய்யப்படும்.

(அ) மாதாந்திர பில் கணக்கீடு - ஏப்ரலுக்கு முந்தைய 12 மாதங்களின் சராசரி மின் கட்டணத்தின் இரு மடங்கு

(ஆ) இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை பில் கணக்கீடு - சராசரி மாதாந்திர கட்டணத்தின் மூன்று மடங்கு

வைப்பு நிதிக்கான வட்டி: தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் நிர்ணயம் செய்யும் விகிதத்தின்படி வைப்பு நிதிக்கான வட்டி கணக்கிடப்பட்டு, ஒவ்வொரு நிதியாண்டின் துவக்கத்திலும், அதாவது ஏப்ரலில் வரவு வைக்கப்படும்.

கூடுதல் வைப்பு நிதி : உங்கள் மின் பளு அல்லது பயனீட்டு அளவு அல்லது கட்டண வீதம் அதிகரித்தால் உங்கள் வைப்பு நிதி அதிகரிக்கப்பட வேண்டியுருக்கும். அச்சமயங்களில் தனியான அறிவிப்பு மூலமாகவோ அல்லது பயனீட்டு கட்டண அட்டையில் தனியான குறிப்பு மூலமாகவோ இந்த கூடுதல் வைப்பு நிதி வசூலிக்கப்படும். இக்கட்டணத்தைச் செலுத்த 30 நாட்கள் வழங்கப்படும், செலுத்தத் தவறினால் மின் இணைப்பு துண்டிக்கப்படும்.

### 5. என்னுடைய பில்லை எப்படி செலுத்துவது?

- நேரடியாக மின்சார அலுவலகத்துக்கு சென்று செலுத்தும் முறையில் ரூ.5000/- க்கு குறைவாக இருந்தால் கட்டணத்தை பணமாகவோ, அதற்கு மேலே உள்ள தொகையினை காசோலை மற்றும் டிமாண்ட் டிராப்ட் மூலமாக செலுத்தலாம்.
- இணைய தளத்தின் மூலமாகவும் கட்டணத்தை செலுத்தலாம்.
- Any time Payment (ATP) இயங்கும் இடங்களில் செலுத்தலாம்
- அனுமதிக்கப்பட்ட வங்கிகளில் மொபைல் மூலம் செலுத்தலாம்
- அனுமதிக்கப்பட்ட அஞ்சலங்களில் செலுத்தலாம்
- இனி வரும் காலங்களில் Prepaid meter வந்தால் மின் கட்டணம் செலுத்தும் பிரச்சனை ஏற்படாது.

### 6. பில்லில் தவறு இருந்தால் என்ன நிகழும்?

பில்லில் தவறு இருந்தாலோ, விதிக்கப்பட்ட கட்டணத்தில் அல்லது கோரப்பட்ட கட்டணத்தில் தவறு இருந்தால், குறைவாக கட்டணம் விதிக்கப்பட்டால், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் அந்த கட்டணத்தை வசூலிக்கும் உரிமை பெற்றுள்ளது. அவ்வாறு வசூல் செய்ய மின்சார சட்டம் 2003யின் படி இரண்டு ஆண்டுக்குள் வசூல் செய்யலாம்.

உங்களிடம் அதிகப்படியாக கட்டணம் வசூலிக்கப்பட்டிருந்தால், உங்களுக்குச் சேர வேண்டிய பணம், வருங்கால மின்பயன்பாட்டுக் கட்டணத்தில் கழித்துக் கொள்ளப்படும். தொடர்ச்சியான இரு கணக்கிடும் காலம் கழிந்த பின்னரும் மீதிப்பணம் இருந்தால், அப்பணம் காசோலையாக உங்களுக்கு திருப்பி அனுப்பப்படும்.

கட்டணம் செலுத்த வேண்டிய கடைசி நாளுக்கு முன்பாகவே பெறப்படும் குறைகள் அடுத்த பயன்பாட்டுக் கட்டணம் கணக்கிடுவதற்கு முன்பு தீர்க்கப்பட்டு, கணக்கில் கழித்துக் கொள்வதோ அல்லது பணம் திருப்பி அளிப்பதோ நிகழ்த்தப்படும்.

கட்டணம் குறித்த குறைபாடு, பணம் செலுத்த வேண்டிய கடைசி தேதிக்கு மூன்று நாட்களுக்குள் கிடைக்கப் பெற்றால் அது கடைசி தேதிக்குள் சரி செய்யப்படும்.

மின்சார சட்டத்தின்படி சச்சரவு இருக்கும் சந்தர்ப்பங்களில், விதிக்கப்பட்ட கட்டணத்தையோ அல்லது கடந்த ஆறு மாதங்களின் சராசரி மாதாந்திர மின் கட்டணத்தைக் கணக்கிட்டு, அதில் எது குறைவோ, அதனை சச்சரவு தீர்க்கப்படும் வரையில் நுகர்வோர் கட்டலாம் என்று கூறுகிறது. (பிரிவு 56 (1) ப் மின்சார சட்டம், 2003)

7. **எந்தெந்த சந்தர்ப்பங்களில் மின் இணைப்பு துண்டிக்கப்படும், துண்டிக்கப்பட்ட இணைப்பு எப்போது மீண்டும் வழங்கப்படும்?**

**இணைப்பு துண்டிப்பு**

- கெடு தேதிக்குள் கட்டணம் செலுத்தி மின் இணைப்பு துண்டிப்பதை தவிர்க்கலாம்.
- பில்லில் ஏதேனும் பிரச்சினை இருந்தால், ஆட்சேபணையின் பேரில் நீங்கள் கீழ்க்கண்டவற்றை செலுத்தினால், இணைப்பு துண்டிக்கப்படக் கூடாது:

  உங்களுக்கு விதிக்கப்பட்டுள்ளதற்கு சமமான கட்டணம் அல்லது சச்சரவுக்கு தீர்வு கிடைக்கும்வரை கடந்த ஆறு மாதங்களின் சராசரி மாதாந்திர கட்டணத்தைக் கணக்கிட்டு, அதன்படி ஒவ்வொரு மாதமும் பணம் செலுத்துவது - இதில் எது குறைவான கட்டணமாக உள்ள, இந்த முறையை உங்களிடம் அதிகப்படியாக கட்டணம் வசூலிக்கப்படுவதாக நீங்கள் கருதினால், கையாளலாம் (பிரிவு 56, மின்சார சட்டம்)

**மறு இணைப்பு**

- வீடு நகர்புறமாக இருப்பின் அதிகப்படியாக 12 மணி நேரத்திற்குள்ளும், கிராமப்புறமாக இருப்பின் 24 மணி நேரத்திற்குள்ளும், கட்டணம் வசூலிக்கப்பட்ட காலத்திலிருந்து மின்சாரம் மீள தரப்பட வேண்டும், மின் பயனீட்டுக் கட்டணம், துண்டிப்பு மற்றும் மறு இணைப்புக் கட்டணங்களும் செலுத்தப்பட வேண்டும்.
- உங்கள் இணைப்பு 6 மாதத்திற்கு மேலாக துண்டிக்கப்பட்டிருந்தால், உங்கள் இணைப்பு பரிசோதிக்கப்பட்டு, மாறுபட்ட பரிசோதனை அறிக்கை பெறப்பட்டு, அதற்கான கட்டணமும் வசூலிக்கப்பட்ட பின்னரே இணைப்பு வழங்கப்படும்.
- மின் ஒப்பந்தம் துண்டிக்கப்படுவதற்கான எச்சரிக்கை அறிக்கை வழங்கப்படுவதற்கு முன்போ அல்லது அந்த அறிக்கை காலத்திலோ மொத்த பாக்கித் தொகையையும் செலுத்திவிட்டால், உங்களுக்கு இணைப்பு மீண்டும் வழங்கப்படும்.

8. **சராசரி அளவீடு பில்லிங் என்றால் என்ன? எப்பொழுது, எவ்வாறு இது கணக்கிடப்படுகிறது?**

மின் அளவி இல்லாதபோதோ அல்லது மின் அளவி குறைபாடுடையதாக இருக்கும்போதோ அல்லது பணி செய்யாமல் இருக்கும்போதோ, மேலும் மின்சாரம் திருடப்படுவதாக சந்தேகம் இல்லாத நிலையில், இதற்கு முந்தைய நான்கு மாதங்களில் விநியோகிக்கப்பட்ட மின்சார அளவின் சராசரியை கணக்கிட்டு (அதே மாதிரியான மின் நுகர்வு நிலை அக்காலத்தில் இருக்கும் நிலையில்) அதன்படி மின்பயனீடு முடிவு செய்யப்படும். மேலும், நுகர்வோரின் மின் அளவியை அணுகமுடியாத நிலையிலும் இம்முறை கையாளப்படும். புதிதாக மின் இணைப்பு வழங்கிய உடனேயே மின் அளவி செயலிழந்தால், புதிய அளவி பொருத்திய பின், வரும் 4 மாதங்களின் சராசரியை கணக்கிட்டு பயனீட்டின் அளவு முடிவு செய்யப்படும். அப்பொழுதும், மின் பயனீட்டின் நிலை இரு கால கட்டங்களிலும் ஒரே மாதிரியாக இருக்கும் பட்சத்தில் இவ்வழி கையாளப்படும்.

இவ்விரு காலகட்டங்களிலும் மின் பயன்பாடுமுறை வெவ்வேறாக இருக்கும் பட்சத்தில் இதற்கு முந்தைய 12 மாதங்களில் இதே மாதிரியான பயன்பாட்டு முறை இருந்த தொடர்ச்சியான 4 மாதங்களின் அளவை கொண்டு கணக்கிடப்படும். இப்படி தொடர்ச்சியான நான்கு மாத கட்டத்தை தேர்ந்தெடுக்க முடியாத நிலையில், மின் பகிர்மானத்திற்கு பொறுப்பான பொறியாளர், இணைப்பின் அளவு மற்றும் பயன்படுத்திய மணித்துணிகளை ஆதாரமாகக் கொண்டு மின் பயனீட்டை கணக்கிடுவார். பொறியாளரின் கணக்கீடு உங்களுக்கு சரியில்லை என்று தோன்றினால் அவருக்கு அடுத்த நிலையிலிருக்கும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக அலுவலரிடம் நீங்கள் முறையிடலாம். அதன் பின்னும் உங்களுக்கு திருப்தி இல்லையெனில், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் நுகர்வோர் குறை தீர்க்கும் மையத்தை அணுகலாம்.

**ஆதாரம் : பகுதி எண் 11 தமிழ்நாடு மின்சார வழங்கல் விதி தொகுப்பு**




## மின்சக்தி சேமிப்பு

இந்திய அரசாங்கம் 2001-ல் மின்சக்தி சேமிப்பு சட்டத்தை இயற்றியதன் கீழ், சக்தி திறன், செயலகத்தை (Bureau of Energy Efficiency - BEE) நிறுவியுள்ளது. இந்திய பொருளாதா ரத்தின் மீது மின் சக்தியின் தாக்கத்தை குறைப்பதே இதன் முக்கிய நோக்கமாகும்.

நமது அன்றாட வாழ்வில் மின்சாரம் அத்தியாவசியமானது. அதே சமயத்தில் அதை சேமிப்பதற்கு முக்கியத்துவம் தருவது உலகளவில் முக்கியமானது. ஒவ்வொரு முறையும் நாம் மின்சாரத்தை சேமிப்பதால் பணச்செலவும் குறைந்து, சுற்றுப்புறச் சூழல் மாசுபடுவதும் தவிர்க்கப்படுகிறது. இன்றைய மின்சக்தி சேமிப்பினால் நாளைய சமுதாயத்தின் தேவைகள் நிறைவேறும் என்பதனை நினைவில் கொண்டு, மின்சக்தியை சிக்கனமாக செலவழிக்க வேண்டும் என்பதனை ஒவ்வொருவரும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

மின் சாதனங்களை உபயோகிக்கும் போது கீழ்க்கண்ட எளிய முறைகளை பின்பற்றினால், மின் கட்டணத்தில் 20% முதல் 30% வரை சேமிக்கலாம்.

1. பகல் நேரத்தில், அத்தியாவசிய தேவை இருந்தாலேயன்றி,, மின் விளக்குகளை பயன்படுத்தாமல், இயற்கை காற்றோட்டத்தை பயன்படுத்தவும்.
2. அறையை விட்டு வெளியேறும்போது மறவாமல் மின் விசிறி மற்றும் மின்விளக்குகளை அணைத்துவிடவும்.
3. வெண்சுடர் விளக்குகளுக்கு (Incandescent Lamps) பதிலாக குறைந்த மின்சாரத்தைக் கொண்டு எரியும் LED விளக்குகளை (LED Bulbs) பயன்படுத்தவும். அது போல, இழை விளக்குகளைக் காட்டிலும் மெல்லிய குழல் விளக்குகள் (LED Tube Lights) எரிய குறைந்த அளவு மின்சாரம்தான் தேவைப்படும் என்பதை கருத்தில் கொள்ளவும்.
4. அவ்வப்போது விளக்குகளில் படியும் தூசியை அகற்றவும். இதனால் மின்னொளி அதிகரிக்கும்.
5. புதிய மின் சாதனங்களை வாங்கும் போது, தரம் நிர்ணயிக்கப்பட்ட, சக்தி திறன் கொண்ட பொருட்களையே தேர்ந்தெடுக்கவும்.

**குளிர்ப்பதனப்பெட்டி:**

1. குளிர்ப்பதனப்பெட்டியை முடிந்தவரை சூரிய ஒளி படாத இடத்தில் வைக்கவும்.
2. குளிர்ப்பதனப்பெட்டி வேலை செய்யும்போது உஷ்ணக்காற்று வெளியேற நிறைய இடைவெளி இருக்க வேண்டும். அவ்வாறு இல்லை என்றால், குளிர்ப்பதனப்பெட்டி வேலை செய்ய அதிக மின்சாரம் செலவாகும் என்பதை நினைவில் கொள்ளவும்.
3. நிறைய பொருட்களை உள்ளே திணிக்காமல் இருக்கவும்.
4. கதவை திறப்பதற்கு முன்னால் எதை எடுக்க வேண்டும் என்று யோசித்து, எடுத்ததும், உடனே கதவை மூடவும். இவ்வாறு செய்வதினால் மின்செலவு குறையும்.
5. குளிர்ப்பதனப்பெட்டிக்குள் உணவு பொருளை சூடாக வைக்காமல் ஆறிய பிறகு அவற்றை நன்றாக மூடி வைக்கவும். இதனால் மின்சக்தி குறைவாக செலவிட முடியும்.
6. குளிர்ப்பதனப்பெட்டியின் உள்ளே பனிக்கட்டி உறைந்து இருந்தால் மின்சாரத்தை துண்டித்து, அதனை கரையவிட்டு, பின்பு துடைத்து, சுத்தம் செய்த பிறகு உபயோகிக்கவும். இதனால் மின்சாரம் குறைவாக செலவாகும்.

**அதிவேக மின் அலை அடுப்பு / கெட்டில்**

1. அதிவேக மின் அலை அடுப்பில் சமையல் செய்யும்போது கனமான பாத்திரத்தில் நடுவே உணவு பொருளை வைத்து உபயோகிக்க வேண்டும்.
2. கெட்டிலில் தேவையான தண்ணீர் மட்டுமே ஊற்றி சூடுபடுத்தவும். இதனால் மின்சக்தி குறைவாக செலவாகும்.

3. அதி வேக மின் அடுப்பின் உட்புறத்தை சுத்தமாக துடைத்து வைக்கவும். அவ்வாறு இல்லையெனில் நிறைய மின்சாரம் செலவாகும்.

4. அதுபோல், கொதிநிலை பாத்திரத்தையும் அவ்வப்போது சுத்தம் செய்வது அவசியம்.

**குளிர்மூட்டும் சாதனம்**

1. கோடை காலத்தில் வெப்பத்தின் தாக்கத்தில் இருந்து பாதுகாத்துக் கொள்ள கூடியவரை மின்விசிறிகளை உபயோகிக்கவும்.

2. நிறைய மரங்களும், செடி கொடிகளும் நம் வீட்டை சுற்றி இருந்தால், அதிகமாக வெயில் தெரியாது. இயற்கை காற்றிற்காக ஜன்னல்களை திறந்து வைப்பது நல்லது. இதனால், குளிர்மூட்டும் சாதனத்தின் உபயோகமும் குறையும்.

3. நல்ல குளிர்மூட்டும் சாதனமாக இருந்தால் 30 நிமிடத்தில் அறையை குளிரச் செய்துவிடும். அதனால் நேரத்தை குறித்து வைத்து, சாதனத்தை அவ்வப்போது அணைத்து விடவும்.

4. குளிர்மூட்டும் சாதனத்தை உபயோகிக்கும் போது ஜன்னல் கதவுகள் மற்றும் அறையின் கதவு நன்றாக மூடியுள்ளதா என்பதை சரி பார்க்கவும்.

5. அவ்வப்போது குளிர்மூட்டும் சாதனத்தின் வடிகட்டியை கழற்றி தூசி இல்லாமல் துடைத்து வைக்கவும்.

6. நீண்ட நாள்பட்ட குளிர்மூட்டும் சாதனம் நிறைய மின்சக்தியை இழுக்கும். அத்தகைய சமயங்களில், புதிய, சக்தி திறன் கொண்ட குளிர்மூட்டும் சாதனத்தை வாங்குவது புத்திசாலித்தனம்.

**கணினி**

1. வீட்டிலும், அலுவலகத்திலும் வேலை இல்லாதபோது கணினியை அணைத்து விடவும். கணினியின் திரையை மட்டும் அணைத்து வைப்பதாலேயே அதிக மின்சாரத்தை சேமிக்க முடியும்.

2. கணினி திரை மற்றும் நகல் எந்திரங்களை உபயோகமில்லாத நேரத்தில் உறக்க நிலையில் வைப்பது நல்லது. இது மின்செலவை பெரிதும் குறைக்கும்.

3. மடிக்கணினி, கைப்பேசி, நிழற்பட கருவி. போன்றவற்றிற்கான சார்ஜர்களின் ப்ளக்கை தேவையில்லாத போது, மின் இணைப்பிலிருந்து அகற்றி விடவும்.

4. கணினியை உபயோகமில்லாதபோது அணைத்து வைப்பதால் அதன் பயன்பாடு நீடிப்பதோடு மட்டுமல்லாமல், மின்சக்தியும் சேமிக்கப்படும். மற்றும் தேவையில்லாமல் மின்சக்தி பயன்பாடும் தவிர்க்கப்படும்.

இவ்வாறாக, அதிக சக்தி திறன் கொண்ட மின் சாதனங்களை பயன்படுத்தியும், குறைவாக, தேவைக்கேற்ப, மின்சாரத்தைப் பயன்படுத்தியும் நம்மால் மின்சக்தியை சேமிக்க இயலும். பொருளாதாரத்தையும், சுற்றுப்புறச்சூழலின் தரத்தையும், மனித வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்த மின்சார சேமிப்பு வழி வகுக்கும் என்பதை கருத்தில் கொள்வது நல்லது.

குறிப்பு விவர பட்டியல் :

1. தமிழ்நாடு மின்சார பகிர்மான செந்தரங்களுக்கான ஒழுங்கு முறை விதிகள் (www.tnerc.gov.in)
2. மின் நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றம் மற்றும் மின்சார குறை தீர்ப்பாளருக்கான ஒழுங்கு முறை விதிகள் (www.tnerc.gov.in)
3. தமிழ்நாடு மின்சார வழங்கல் விதித்தொகுப்பு (www.tnerc.gov.in)
4. தமிழ்நாடு மின்சார பகிர்மான விதித்தொகுப்பு (www.tnerc.gov.in)
5. மின்சார சட்டம் 2003 (www.cercind.gov.in)
6. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் இணையதளம் (www.tangedco.gov.in)

## மின் நுகர்வோர் மையங்கள் :

**Madras Metropolitan Consumer Rights Protection Centre (MMCRPC)**
No. 118, Fourth Street,
Kamaraj Nagar, Avadi,
Tiruvallur District.
Chennai - 600 071,
Phone: 044-26554434
Mobile: 9382828286 / 9486882626
Email: ecctiruvallur@gmail.com

**Tirunelveli District Consumer Rights Protection Sangam**
No. 9, Kulapirai Street,
Tirunelveli Town,
Tirunelveli - 627 006
Phone: 0462 2338544
Mobile: 94879 83160
Email: ecctirunelveli@gmail.com

**Southern Consumers Organisation for Protection & Empowerment - (SCOPE)**
No. 49, Raja Street, FCI Nagar,
Semmandalam,
Cuddalore - 607 001
Phone: 04142-233798
Mobile: 9443285555
Email: ecccuddalore@gmail.com

An initiative supported by

SHAKTI
SUSTAINABLE ENERGY FOUNDATION